# IN THE COURT OF THE PRINCIPALDISTRICT MUNSIF, ATTUR

## O.S. No. 241/2002

Deposition of **D.W.1** witnesses for Plaintiff/Defendant Solemnly affirmed by Tr. G. Mahavishnu, Gr. III Bench Clerk of this court, on 02.02.2026 in accordance with the provisions of Act 1 of 1873.

Name : பிரவீன் குமார் Father's Name : சின்னசாமி

துவக்க நேரம்: 03.55 P.M.

சாட்சி முன்னிலையானார் உறுதிமொழி செய்து வைக்கப்பட்டார்.

**வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**

1. நான் தாக்கல் செய்துள்ள முதல் விசாரணை நிரூபண வாக்குமூலத்தில் உள்ள திருத்தங்கள் யார் செய்தது என்றால் நான்தான் செய்தேன். அதில் எனது வயது 25 என கூறியுள்ளேன் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் ஆவணம் என்னுடைய ஆதார் அட்டையின் நகல் என்றால் சரிதான். அதில் எனது பிறந்த தேதி 25.10.2000 என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி ஆவணம் **வா.த.சா.ஆ. 7** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

2. இந்த வழக்கு கடந்த 2002-ஆம் ஆண்டு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றாலும் வழக்கு தாக்கல் செய்யப்பட்டபோது எனக்கு 1 அல்லது 1-1/2 வயது தான் இருந்திருக்கும் என்றால் சரிதான். நான் எனது தரப்பில் எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தாவா சொத்து எப்போது வாங்கப்பட்டது என்று எனக்கு நேரடியாக தெரியுமா என்றால், தெரியாது எனது அப்பா கூறிதான் தெரியும். தாவா சொத்தை எனது நிரூபண வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ள கடந்த 12.12.1994-ம் தேதியிட்ட கிரைய ஆவணத்தின்மூலம் வாதிகள் கிரையம் பெற்று அனுபவித்து

வருவதாக கூறியுள்ளேன் என்றால சரிதான். தாவா சொத்தை எங்கள் தரப்பில் யார் கிரையம் பெற்றார் என்றால் எங்கள் தாத்தா கருப்பண்ணன் கிரையம் பெற்றார். மேற்படி கிரையம் பெற்ற தேதி தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி கருப்பண்ணனுக்கு எத்தனை வாரிசுகள் என்றால் எனது பாட்டி நல்லம்மாள், அவரது மகன்கள் அம்பாயிரம், கலியன் ஆகியோர்கள் வாரிசுகள் ஆவார்கள். மேற்படி அம்பாயிரத்தின் மகன் சின்னசாமி என்றாலும் நான் சின்னசாமி மகன் என்றாலும் சரிதான். நான் எதுவரை படித்துள்ளேன் என்றால் மருத்துவ படிப்பை எனது தந்தை இறந்ததால் பாதியில் நிறுத்திவிட்டேன்.

3. வாதி எனது பக்கத்து நிலத்துக்காரர் என்றால் சரிதான். வாதி எனக்கு எவ்வளவு நாட்களாக தெரியும் என்றால் 5, 6 ஆண்டுகளாக தெரியும். வாதி வணிகவரித்துறையில் மாநில வணிகவரி அலுவலராக பணிபுரிந்து ஓய்வு பெற்றவர் என்றால் சரிதான். வாதியின் தாயார் பற்றி தெரியுமா என்றால் தெரியாது. என்னிடம் காட்டப்படும ஆவணம் கடந்த 1969-ம் ஆணடு அலமேலு அம்மாள் ஆசிரியர் என்பவருக்கு கருப்பண்ணன் என்பவரும் அவரது குமரர் அவர்களும் அம்பாயிரம், கலியன் ஆகியோர்கள் சேர்ந்து எழுதிக்கொடுத்த கடன் ஆதார பத்திரம் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி ஆதார கடன் தீர்க்கப்பட்டதா என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

4. தாவா சொத்தானது எனது தாத்தா கருப்பண்ணனுக்கு பாத்தியப்பட்டது என்று கூறியுள்ள நிலையில் அதற்கான ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டதா என்றால் அது பற்றி கூறப்படவில்லை. எனது தாத்தா கிரையம் பெற்ற தேதி கடந்த 27.04.1966 தெரியுமா என்றால் எனக்கு தேதி தெரியாது, ஆனால் அந்த சொத்து தாத்தாவின் சொத்து என்று தெரியும். எனது தாத்தாவிற்கு எவ்வாறு பாத்தியப்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

Typed by Selvi. C. Sasikala - O.S. No.241/2002, Dt.02.02.2026.

5. தாவா சொத்திற்குண்டான கடனை எனது தாத்தா திருப்பி செலுத்தியதற்கான எந்த ஆவணமும் நீதிமன்றத்தில் ஒப்படைக்கவில்லை என்றால் சரிதான். கடந்த 01.09.2002 தேதியில் வாதிகள் குறிப்பிடுவதுபோல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்று எனது நிரூபண வாக்குமூலத்தில் கூறியுள்ளேன் என்றால் சரிதான், ஆனால் அந்த சம்பவம்பற்றி நேரடியாக தெரியாது, அப்பா கூறிதான் தெரியும்.

6. தாவா சொத்தை நீதிமன்ற ஆணையர் மூலம் அளவீடு செய்து எங்கள் தரப்பில் மனு தாக்கல் செய்யப்பட்டதா என்றால் இல்லை. எனது நிரூபண வாக்குமூலத்தில் இரு தரப்பினர் சொத்தையும் துல்லியமாக அளவீடு செய்ய வாதிகள் முன்வரவில்லை என கூறியுள்ளேன் என்றால் சரிதான். அவ்வாறு அளவீடு செய்தால் வாதிகளுக்கு பாதகமாகிவிடும் என கூறியுள்ளேன் என்றால் சரிதான். அவ்வாறு கூறியுள்ள நிலையில் வாதிகள்தான் எங்களது நிலத்தை ஆக்கிரமிப்பு செய்துள்ளார்களா என்றால் ஆமாம். அவ்வாறு ஆக்கிரமிப்பு செய்யப்பட்ட பகுதியை மீட்க வேண்டி நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. இந்த தாவாவில் மேற்கண்ட பரிகாரத்தை கோரியுள்ளேனா என்றால் இல்லை. தாவாவில் எந்த பரிகாரமும் எங்கள் தரப்பில் கேட்கப்படவில்லை என்றால் சரிதான்.

வாதி தரப்பு குறுக்கு விசாரணை முழுவதும் முடித்துக்கொள்வதாக தெரிவிக்கப்பட்டது.

முடிவு நேரம்: 04.26 P.M.

Taken down before / by me in open court and read over / interpreted to the witness and acknowledged by him /her to be correct

Sd/-D.Jansi Rani,
Principal District Munsif (FAC), Attur

Typed by Selvi. C. Sasikala - O.S. No.241/2002, Dt.02.02.2026.